# කාර්ය සාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# PERFORMANCE REPORT



# 2015

## භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව

## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம

## Department of Treasury Operations

| | | |
|---|---|---|
| මුදල් අමාත්‍යාංශය | நிதி அமைச்சு | Ministry of Finance |
| කොළඹ 01. | கொழும்பு 01. | Colombo 01. |

## உள்ளடக்கம்


| | பக்க இல. |
|---|---|
| ➢ தொலை நோக்கு | 02 |
| ➢ எமது பணி | 02 |
| 1. அறிமுகம் | 03 |
| 2. முக்கிய தொழிற்பாடுகள் | 03 |
| 3. நிறுவனக் கட்டமைப்பு | 04 |
| 4. பதவியணி தொடர்பான தகவல்கள் | 05 |
| 5. மனித வள அபிவிருத்தி | 06 |
| 6. நிதிச் செயலாற்றுகை | 10 |
| 7. பௌதிகச் செயலாற்றுகை | 12 |
| 7.1 காசு முகாமை | 12 |
| 7.2 பொதுப் படுகடன் முகாமை | 17 |
| 7.3 வெளிநாட்டு உதவி முகாமை | 22 |
| 7.4 அரசாங்க வருமானம் | 23 |
| 7.5 திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் முன்னேற்றமும் திறைசேரியும் திறைசேரி நிதி முகாமை முறைமை | 26 |
| 7.6 ஆதனக் கடன் உத்தரவாத நிதியம் | 29 |

## ➢ *எமது நோக்கு*

*"தென்னாசியப் பிராந்தியத்தில் மிகச் சிறந்த அரசாங்க நிதி முகாமையாளராகத் திகழ்தல்"*

## ➢ *எமது பணி*

*" திரட்டு நிதியத்திற்கும் ஏனைய திறைசேரி நிதியங்களுக்கும் சொந்தமான நிதிகளைக் கையாள்வதில் வினைத்திறனையும் சிக்கனத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் உள்ளிட்ட நிதிக் கணக்கீட்டுக்கு தலைமைத்துவம் வழங்கும் அதவேளை அரசாங்க செலவினங்களை அரசிறைத் திட்டங்கள் மற்றும் கடன்பெறுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்ற வகையில் வரையறுப்பதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுதல்".*


## *1. அறிமுகம்*

*திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களமானது திரட்டு நிதியம் (திறைசேரி காசுப் பாய்ச்சல்), பொதுப் படுகடன் என்பவற்றின் முகாமையுடன் தொடர்புடைய விடயங்களைக் கையாள்வதற்கான வினைத்திறன்மிக்க நிறுவனம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் 2004 ஜூலை 28 ஆந் திகதி தாபிக்கப்பட்டது. இந்நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியாக, தேசிய வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை தொழிற்பாட்டு ரீதியான காசு உட்பாய்ச்சலாகவும் வெளிப்பாய்ச்சலாகவும் மாற்றுவதுடன் கடன்களூடாக நிதியிடப்பட வேண்டிய பற்றாக்குறைகளை அடையாளம் காணும் பணியை திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மேற்கொள்கின்றது. அரசாங்கத்தின் இலக்காகக் கொள்ளப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்காக தேசிய வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பயனுறுதி வாய்ந்த முன்னேற்றக் கண்காணிப்பை இலகுபடுத்தும் நோக்கில் மதிப்பிடப்பட்ட வருடாந்த உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும் முதலில் மாதாந்தப் பெறுமானங்களாகவும் பின்னர் நாளாந்தப் பெறுமானங்களாகவும் பிரிக்கப்படுகின்றன. தீர்மானிக்கப்பட்ட இலக்குகளிலிருந்து விலகல்கள் ஏற்படும் சாத்தியம் காணப்படுமாயின், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காகப் பொருத்தமான உபாயங்களைக் கைக்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்படும்.*

## *2. முக்கிய தொழிற்பாடுகள்*

- *திறைசேரியின் காசுப் பாய்ச்சல் முகாமை*
- *உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்பெறுகைகளுக்கான வசதி ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல்.*
- *கொடுப்பனவு முறைகளின் ஊடாக திறைசேரி நிதிகளைப் பகிர்ந்தளித்தல்.*
- *செலவீட்டு முகவரகங்களுக்கான நிதிகளை மதிப்பீடு செய்தல், முன்னுரிமைப்படுத்தல், விடுவித்தல்.*
- *திறைசேரி உத்தரவாதங்களை வழங்குதல்*
- *அரசாங்கத்தின் கடன் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய நிதிப் பாய்ச்சல்களைத் தொழிற்படுத்துதல்.*
- *வரியல்லாத வருமானங்களை 10 தலைப்புக்களின் கீழ் மதிப்பீடு செய்து, சேகரித்து கணக்கீடுசெய்தல்.*
- *வெளிநாட்டு உதவிக் கடன்கள் மற்றும் நன்கொடைகளின் கீழான நிதிகளின் விடுவிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.*
- *அரசாங்கத்தின் கடன்பெறுகைகள் மற்றும் படுகடன் மீளளிப்புக்களை கணக்கீடு செய்தல்.*
- *அரசாங்கத்தின் வங்கிக் கணக்குகளுக்கும் கட்டுநிதிக் கணக்குகளுக்கும் அதிகாரமளித்தலும் அவற்றை மேற்பார்வை செய்தலும்.*
- *வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் கணக்கீட்டுக்கான வழிகாட்டல்களை வழங்கி மேற்பார்வை செய்து வசதி ஏற்பாடுகளைச் செய்தல்.*

# 3. நிறுவனக் கட்டமைப்பு



## *4. பதவியணி தொடர்பான தகவல்கள்*

*அட்டவணை 4 (அ) 2015.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை*

| பதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள ஊழியர் தொகை |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 1 | 1 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2 | 2* |
| இ.க.சே - வகுப்பு I | 7 | 8 |
| இ.க.சே - வகுப்பு II/III | 9 | 8 |
| இ.நி.சே. - வகுப்பு III | 1 | 1 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 |
| அபிவிருத்தி உதவியாளர் | 20 | 15 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் -வகுப்பு I/II/III | 55 | 53 |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் உதவியாளர் | 7 | 1 |
| சாரதிகள் | 7 | 7 |
| அலுவலக உதவியாளர் - வகுப்பு I/II/III | 12 | 12 |
| மொத்தம் | 122 | 109 |

* இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இலுள்ள உத்தியோகத்தரொருவர் விசேட தரத்திற்குரிய பதவியான மேலதிகப் பணிப்பாளர் நாயகமாகப் (பதில் கடமை) பணியாற்றுகின்றார்.

## *5. மனித வள அபிவிருத்தி*

*அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் இத்திணைக்களம் தனது உத்தியோகத்தர்களைப் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பல் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்தது.*

### *அட்டவணை 5 (அ) உள்நாட்டுப் பயிற்சிகள் 2015*

| ஊழியர் வகுதி | பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை | பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தளின் எண்ணிக்கை | பயிற்சித் துறை | அமைவிடம் |
|---|---|---|---|---|
| பதவிநிலை உத்தியோகத்தர்கள் | *04* | *03* | இ-ஆளுகை மாற்ற முகாமைப் பயிற்சி | நிதியியல் கற்கைகள் கல்விக்கழகம் |
| | | *05* | இலங்கை அரச துறைக் கணக்கீடுத் தரநியமங்கள் | ஏர்னஸ்ட் அண்ட் யங் நிறுவனம் |
| | | *01* | அமைச்சரவை விஞ்ஞாபானம் வரைதல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் |
| | | *01* | பொதுப் பெறுகைகள் முக்கிய அம்சங்கள் | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | *02* | *04* | தொழில் நோக்கத்திற்கான ஆங்கிலம் *( CEEP )* | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் |
| | | *01* | மனப்பாங்குகள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு | மனித வள மேம்பாட்டு நிறுவனம் |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | *02* | *05* | தொழில் நோக்கத்திற்கான ஆங்கிலம் *( CEEP )* | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் |
| | | *09* | இ-ஆளுகை மாற்ற முகாமைப் பயிற்சி | நிதியியல் கற்கைகள் கல்விக்கழகம் |
| அனைவரும் | *01* | *15* | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான தமிழ்மொழிப் பாடநெறி | திணைக்கள வளவு |

இவை தவிர, ஊழியர்களிடம் குழு உணர்வைக் கட்டியெழுப்பி மனப்பாங்குகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 2015 ஒக்டோபர் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் கலாவாவியிலுள்ள 'தேசிய உள்நாட்டு மீன்பிடித்துறை, நீரியல் பயற்சி நிறுவனத்தில்' வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது. இப்பயிற்சிநெறியானது சுய முன்னேற்றத்திற்கும் ஊழியர் குழாத்தின் அங்கத்தவர்களுக்கு இடையேயான பரஸ்பர தொடர்புகளை விருத்திசெய்வதற்கும் உதவியாக அமைந்தது. இந்நிகழ்ச்சியில் இத்திணைக்களத்தின் 47 ஊழியர்கள் சிறப்பாகப் பங்கேற்றனர்.

மேலும், இவ்வருடத்தில் 25 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளிலும் மாநாடுகளிலும் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

**அட்டவணை 5 (ஆ) -2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பங்கேற்ற மாநாடுகள்**

| | பயிற்சி/கருத்தரங்கு அல்லது மன்றம் | நாடு | காலப் பகுதி | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | அராங்கச் செயலாற்றுகை ஊக்குப்பு: பெறுபேறுகளை உருவாக்கும் தலைமைத்துவ உபாயங்கள் | ஐக்கிய அமெரிக்கா | 20.09.2015 - 25.09.2015 | 01 |
| 02 | சுயபயிற்சியின் ஊடாகத் தலைமைத்துவம், தொடர்பாடல் மற்றும் இடைத் தொடர்புத் திறன்கள் | மலேசியா | 29.08.2015 - 07.09.2015 | 06 |
| 03 | ஒக்ஸ்போர்ட் உயர் நிதி நிகழ்ச்சி | மலேசியா | 12.09.2015 - 22.09.2015 | 07 |
| 04 | அரச துறைக் கணக்கீடு | மலேசியா | 24.08.2015 - 25.08.2015 | 01 |
| 05 | ADBI கடன் தரப்படுத்தல் மன்றம் | ஜப்பான் | 10.07.2015 | 01 |
| 06 | அபிவிருத்தி நிதிக்கான பணம் அனுப்புகை தொடர்பான ஆசிய அபிவிருத்தி வங்கி மன்றம் | பிலிப்பைன்ஸ் | 18.03.2015 - 19.03.2015 | 01 |

| | பயிற்சி/கருத்தரங்கு அல்லது மன்றம் | நாடு | காலப் பகுதி | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 07 | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் திறைசேரி முகாமையினை நவீனமயப்படுத்துதல் | சிங்கப்பூர் | 27.07.2015 - 31.07.2015 | 02 |
| 08 | ஐரோப்பிய - ஆசிய நாடுகளுக்னா சீனாவின் பொருளாதார, சமூக அபிவிருத்தி அனுபவங்கள் | சீனா | 01.07.2015 - 21.07.2015 | 01 |
| 09 | படுகடன் முகாமைச் செயலாற்றுகை மதிப்பீடு | வியட்னாம் | 14.12.2015 - 18.12.2015 | 01 |
| 10 | படுகடன் முகாமை வசதி தொடர்பான உலக வங்கியின் வருடாந்தம் பங்காளர்கள் மன்றம் | பிலிப்பைன்ஸ் | 03.06.2015 - 04.06.2015 | 01 |
| 11 | அரசாங்க பெறுகைகள், ஒப்பந்த நிர்வாக டிப்ளோமாவின் ஒரு பகுதியாக இரண்டாம் நாட்டுக்கான விஜயம் (இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்) | மலேசியா | 21.01.2015 - 27.01.2015 | 01 |
| 12 | முதுமானிப் பட்ட நிகழ்ச்சி - நிதி | தென்கொரியா | 23.08.2015 - 28.02.2017 | 01 |
| 13 | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான உள்நாட்டுப் பிராந்தியங்களின் வெளிநாட்டு மூலதனங்களின் அறிமுகமும் பயன்பாடும் என்ற தலைப்பிலான கருத்தரங்கு | சீனா | 21.10.2015 – 10.11.2015 | 01 |

## *5. (இ) சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்*

*அரசாங்கத்தின் நிதி முகாமையை மேம்படுத்தும் நோக்கில் இத்திணைக்களம் 2015 ஆம் ஆண்டில் பின்வரும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை வெளியிட்டது.*

| திகதி | சுற்றறிக்கை இல. | தலைப்பு |
|---|---|---|
| *21.05.2015* | *TOD-01-2015* | *20016 ஆம் ஆண்டுக்கான வருமான மதிப்பீடுகள்* |
| *21.05.2015* | *TOD-02-2015* | *வருமானம் நிலுவைகள் கூற்று - 30.06.2015* |
| *08.07.2015* | *TOD-04-2015* | *ரமழான் பண்டிகை 2015 ஜூலை மாதம் 18ஆந் திகதியில் வருவதனை முன்னிட்டு 2015 ஜூலை மாத சம்பளத்தை முன்கூட்டிச் செலுத்துதல்* |
| *15.10.2015* | *TOD-05-2015* | *2016 ஆம் ஆண்டுக்கான சம்பளங்கள், சம்பள முற்பணங்கள், ஓய்வூதியங்கள் என்பவற்றைச் செலுத்துதல்* |
| *23.10.2015* | *TOD-03-2015* | *உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கான திறைசேரியின் அங்கீகாரம்* |
| *23.11.2015* | *TOD-06-2015* | *2015 ஆம் ஆண்டுக்கான காசேடுகளை முடிவுறுத்துதல் மற்றும் கட்டுநிதிக் கணக்குகளைத் தீர்த்தலும்* |
| *09.12.2015* | *TOD-07-2015* | *வருமான நிலுவைகள் கூற்று - 31 12. 2015* |
| *14.12.2015* | *TOD-08-2015* | *2016 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் கீழ் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக ஒவ்வொரு திணைக்களத்திற்குமான வருடாந்தம் கட்டுநிதி வரையறைகளைத் தீர்மானிப்பதற்கான தகவல் சேகரிப்பு* |

## 6. நிதிச் செயலாற்றுகை 2015

| விடயம் | வகை/பொருள்/விடயம்/விபரம் | 2014 | | 2015 | | 2014 ஆம் ஆண்டின் உண்மைச் செலவினங்களின் அடிப்படையில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மையான | மதிப்பீடு | உண்மையான | 2015 ஆம் ஆண்டின் செலவின அதிகரிப்பு (வீழ்ச்சி) | செலவின வேறுபாட்டு வீதம் |
| | மீளெழும் செலவுகள் | 3,971,643 | 3,891,932 | 976,675 | 810,593 | (3,081,339) | (79.17) |
| | **ஆள்சார் வேதனாதிகள்** | **40,410** | **40,102** | **55,980** | **53,954** | **13,852** | **34.54** |
| 1001 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 24,500 | 24,214 | 26,000 | 24,583 | 369 | 1.52 |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள் | 510 | 508 | 600 | 428 | (80) | (15.75) |
| 1003 | ஏனைய படிகள் | 15,400 | 15,380 | 29,380 | 28,943 | 13,563 | 88.19 |
| | **பிரயாணச் செலவுகள்** | **1,370** | **1,365** | **940** | **876** | **(489)** | **(35.82)** |
| 1101 | உள்நாட்டு | 70 | 69 | 100 | 71 | 2 | 2.90 |
| 1102 | வெளிநாட்டு | 1,300 | 1,296 | 840 | 805 | (491) | (37.89) |
| | **வழங்கல்கள்** | **3,203** | **3,198** | **3,805** | **3,775** | **577** | **18.04** |
| 1201 | எழுது பொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 1,010 | 1,010 | 1,700 | 1,678 | 668 | 66.14 |
| 1202 | எரிபொருள் | 2,125 | 2,120 | 2,030 | 2,025 | (95) | (4.48) |
| 1203 | உணவு மற்றும் சீருடைகள் | 68 | 68 | 75 | 72 | 4 | 5.88 |
| | **பராமரிப்புச் செலவினம்** | **1,278** | **1,267** | **2,175** | **1,621** | **354** | **27.94** |
| 1301 | வாகனம் | 1,000 | 992 | 1,410 | 937 | (55) | (5.54) |
| 1302 | பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 210 | 210 | 465 | 451 | 241 | 114.76 |
| 1303 | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | 68 | 65 | 300 | 233 | 168 | 258.46 |
| | **சேவைகள்** | **2,344** | **2,337** | **3,275** | **3,249** | **912** | **39.02** |
| 1401 | போக்குவரத்து | 860 | 854 | 1,375 | 1,374 | 520 | 60.89 |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 1,410 | 1,410 | 1,775 | 1,756 | 346 | 24.54 |
| 1405 | ஏனையவை | 74 | 73 | 125 | 119 | 46 | 63.01 |
| | **மாற்றல்கள்** | **3,923,038** | **3,843,663** | **910,500** | **747,118** | **(3,096,545)** | **(80.56)** |
| 1503-01 | லொத்தர் அபிவிருத்தி மானிய அளவீடுகளின் மீளளிப்பு | 499,363 | 420,012 | 509,450 | 346,105 | (73,907) | (17.60) |
| 1504 | அபிவிருத்தி மானியங்கள் - இ. பெ. கூட்டுத்தாபனத்திற்கான மண்ணெண்ணெய் மானியம் | 30,22,775 | 30,22,775 | - | - | (3,022,775) | (100.00) |
| 1505-01 | அரசாங்க ஊழியர் காப்புறுதித் திட்டத்திற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு | 400,000 | 400,000 | 400,000 | 400,000 | - | - |
| 1506 | அரசாங்க ஊழியர்களின் சொத்துக் கடன்களுக்கான வட்டி | 900 | 876 | 1,050 | 1,013 | 137 | 15.64 |

ரூபா
'000

| விடயம் | வகை/பொருள்/விடயம்/விபரம் | 2014 | | 2015 | | 2014 ஆம் ஆண்டின் உண்மைச் செலவினங்களின் அடிப்படையில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மையான | மதிப்பீடு | உண்மை யான | 2015 ஆம் ஆண்டின் செலவின அதிகரிப்பு (வீழ்ச்சி) | செலவின வேறுபாட்டு வீதம் |
| | மூலதனச் செலவினம் | *6,892* | *6,460* | *6,300* | *5,350* | *(1,110)* | *(17.18)* |
| | **மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | ***3,242*** | ***2,955*** | ***1,700*** | ***1,609*** | ***(1,346)*** | ***(45.55)*** |
| *2001* | கட்டடப் புனரமைப்பும் மேம்பாடும் | *1,300* | *1,217* | *100* | *83* | *(1,134)* | *(93.18)* |
| *2002-1* | திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் அமுலாக்கம் | *1,000* | *812* | *1,000* | *981* | *169* | *20.81* |
| *2002-2* | ஏனையவை | *142* | *140* | *100* | *51* | *(89)* | *(63.57)* |
| *2003* | வாகனம் | *800* | *786* | *500* | *494* | *(292)* | *(37.15)* |
| | **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | ***3,000*** | ***2,999*** | ***2,800*** | ***1,950*** | ***(1,049)*** | ***(34.98)*** |
| *2102* | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | *3,000* | *2,999* | *2,800* | *1,950* | *(1,049)* | *(34.98)* |
| | **மனித வள அபிவிருத்தி** | ***650*** | ***506*** | ***1,800*** | ***1,791*** | ***1,285*** | ***253.95*** |
| *2401* | பயிற்சியும் திறன்விருத்தியும் | *650* | *506* | *1,800* | *1,791* | *1,285* | *253.95* |

## 7. பௌதிகச் செயலாற்றுகை

### 7.1 காசு முகாமை

#### 7.1.1 திறைசேரி காசுப் பாய்ச்சல் முகாமை

திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களமானது வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட கொள்கை இலக்குகளை அடைவதற்காக அரசாங்க நிதியை வினைத்திறன்மிக்க முறையில முகாமை செய்து கடன்பெறுகைச் செலவுகளைக் குறைப்பதற்காக 2015 ஆம் ஆண்டில் வினைத்திறன்மிக்க காசுத் திட்டமிடல் மற்றும் முகாமை உபாயமொன்றைப் பின்பற்றியது. இக்குறிக்கோள்களை அடையப் பெறுவதற்காக அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பவற்றுக்கு உரிய காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் நிதியினை விடுவிப்பது திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்தின் அடிப்படையான பொறுப்புக்களில் ஒன்றாகும். அரசாங்கத்தினால் எதிர்பார்த்தது போன்று உரிய நேரத்தில் வருமானங்களைச் சேகரிக்க முடியாது போனமையினால் காசுக்கான கேள்வியைப் பூர்த்திசெய்தல் நடைமுறைச் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதனால், ஒவ்வொரு அமைச்சினாலும் திணைக்களத்தினாலும் முன்வைக்கப்படும் காசுக்கான கேள்வியின் உண்மையான தேவையை, அவை என்ன நோக்கத்திற்காக காசு கோருகின்றன என்பதைக் கவனத்திற் கொண்டு மதிப்பீடு செய்து, வரவு செலவுத் திட்டத்தைப் பயனுறுதி வாய்ந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக முன்னுரிமை அடிப்படையில் கட்டுநிதிகளை விடுவிப்பது இத்திணைக்களத்தின் பிரதான பொறுப்புக்களில் ஒன்றாகும்.

திறைசேரியின் காசுப் பாய்ச்சலை வினைத்திறன்மிக்க முறையில் முகாமை செய்யும் நோக்கில், திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் எதிர்பார்க்கப்படும் மொத்தக் காசு உட்பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்டு காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் கடன்பெறுகைக் கால வரையறைகளைக் கவனத்திற் கொண்டு மாதாந்த தொழிற்பாட்டுக் காசு முகாமைத் திட்டமொன்றை தயாரிக்கின்றது. இந்த மாதாந்தத் திட்டமானது வருடாந்த காசுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு அமைவாக, எதிர்பார்க்கப்படும் கடன்கள், காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் திட்டமிடப்பட்ட கடன்பெறுகைகள் என்பவற்றைக் கொண்டதாகத் தயாரிக்கப்படுகின்றது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம், மதுவரித் திணைக்களம் என்பவற்றால் சமர்ப்பிக்கப்படும் எதிர்வுகூறல்கள், எதிர்பார்க்கப்படும் வரி மற்றும் வரியல்லா வருமானப் பெறுகைகள் மற்றும் தொடர்புடைய அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் எதிர்வுகூறப்படும் செலவினங்கள் அவற்றின் மாதாந்தப் போக்குகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த மற்றும் மாதாந்தக் காசுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. நாளாந்தம் இற்றைப்படுத்தப்படும் தொழிற்பாட்டுக் காசுப் பாய்ச்சல்களின் ஊடாக வினைத்திறன்மிக்க செலவின முகாமை, முன்னேற்றகரமான வருமானம் சேகரிப்பு என்பவற்றுடன் தொடர்புடைய கொள்கைசார்

விடயங்கள் தொடர்பான பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதில் திறைசேரித் தொழிற்பாட்டுத் திணைக்களம் சிறந்த பங்களிப்பை வழங்கியது.

வருடாந்த வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடையும் நோக்கில் உரிய நேரத்திலான அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம், மதுவரித் திணைக்களம், மோட்டரர் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் என்பன போன்ற முக்கியமான வருமானம் சேகரிப்புத் திணைக்களங்களின் தலைவர்களினதும் தொடர்புடைய நிறைவேற்று உத்தியோகத்தர்களினதும் பங்கேற்புடன் திறைசேரியின் செயலாளரின் தலைமையில் 2015 ஆம் ஆண்டில் பதினாறு (16) காசுப் பாய்ச்சல் கூட்டங்க நடாத்தப்பட்டன. திறைசேரியின் செயலாளருக்கு மீளாய்வு செய்து தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் நோக்கில், திறைசேரியின் பிரதிச் செயலாளர் செயலாளர்களும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்களின் தலைவர்களும் பிரதித் தலைவர்களும் இக்கூட்டங்களில் பங்கேற்றறனர். இக்கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட வருமானம் சேகரித்தல் மற்றும் செலவினத்துக்கான கேள்விகள் தொடர்பான தொடர்ச்சியானதும் கண்டிப்பானதுமான மீளாய்வு, எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை வழங்கக்கூடிய விதத்தில் கொள்கைகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்களில் மாற்றங்களைச் செய்வதற்கு உதவியது.


முன்னைய வருடங்களைப் போன்று இவ்வருடத்திலும் வருமானத்திற்கும் செலவினங்களுக்கும் இடையிலான இடைவெளி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்பெறுகையின் மூலம் நிரப்பப்பட்டது

## 7.1.2 திறைசேரி காசு உட்பாய்ச்சல்

அட்டவணை 7.1 (அ) வருமானம் சேகரிப்பு - 2015 (ரூபா மில்லியன்)

| | மதிப்பீடு | உண்மையான | % |
|---|---|---|---|
| வரி வருமானம் | 1,277,700 | 1,270,065 | 99 |
| வரியல்லா வருமானம் | 76,239 | 63,046 | 83 |
| நன்கொடை | 3,166 | 1,540 | 49 |
| **மொத்த வருமானம்** | 1,357,105 | 1,334,651 | 98 |


***வரைபு 7.1 (அ) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை வருமானம் 2015***




***அட்டவணை 7.1 (அ) வருமானம் சேகரிப்பு - 2011 முதல் 2015(ரூபா மில்லியன்)***

| | *2011* | *2012* | *2013* | *2014* | *2015* |
|---|---|---|---|---|---|
| வரி வருமானம் | *795,696* | *833,520* | *920,225* | *987,712* | *1,270,065* |
| வரியல்லா வருமானம் | *86,586* | *124,359* | *102,447* | *97,237* | *63,046* |
| நன்கொடை | *3,267* | *3,171* | *2,307* | *2,495* | *1,540* |

***வரைபு 7.1 (ஆ) அரசாங்க வருமானத்தின் போக்கு 2011-2015***



அட்டவணை 7.1 (அ) இல் காட்டப்பட்டுள்ளது போன்று 2015 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 98 சதவீதமாகக் காணப்பட்டது. இது வரி வருமானத்தின் மூலமான 99 சதவீதத்தையும் வரியல்லா வருமானத்தின் மூலமான 83 சதவீதத்தையும் வெளிநாட்டு நன்கொடை மூலமான 49 சதவீதத்தையும் கொண்டதாகக் காணப்பட்டது.

வருமானச் சேகரிப்புக் கண்காணிப்பைப் பலப்படுத்தியதன் மூலம் 2015 ஆம் ஆண்டில் திறைசேரியினால் 1,270,065 மில்லியன் ரூபாவை வரி வருமானமாகச் சேகரிக்க முடிந்தது. இது 2014 ஆம் ஆண்டில் சேரிக்கப்பட்ட வரி வருமானமான ரூபா 987,712 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 29 சதவீத அதிகரிப்பாகும். இந்த வரி வருமான அதிகரிப்புக்கு அதிஈட்ட வரி, பந்தய மற்றும் சூதாட்ட அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பன அறிமுககப்படுத்தப்பட்டமையும் மோட்டார் வாகனங்களுக்கான கலால் வரி திருத்தியமைக்கப்பட்டமையும் பிரதானமாகப் பங்களிப்புச் செய்தன. வெளிநாட்டுக் கொடைகள் மூலமான காசு உட்பாய்ச்சல் 1,540 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2014 ஆம் ஆண்டின் இவ்வருமான வகையுடன் ஒப்பிடுகையில் 38% வீழ்ச்சியாகும். இந்த வகையில், 2015 ஆம் ஆண்டில் மொத்த வருமானத்தில் 95 சதவீதம் வரி வருமானமாகக் காணப்பட்டது. மீதி 5 சதவீதம் வரியல்லா வருமான மற்றும் மானியங்களின் மூலம் பெறப்பட்டது.

### 7.1.3 திறைசேரி காசு வெளிப்பாய்ச்சல்

திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களமானது எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான அரசாங்கத்தின் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்துக்கு உதவியாக அமையும் விதத்தில் மூலதனச் செலவினங்களை தேவையான மட்டத்தில் பேணி வருவதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கும் பங்களிப்புச் செய்தது.
பெறப்பட்ட கடன்களுக்கான வட்டியை உள்ளடக்கிய அரசாங்கத்தின் மீளெழும் செலவுகளைப் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் தேவையான வருமானங்களைச் சேகரிப்பது இத்திணைக்களம் எதிர்நோக்கும் முக்கியமான சவால்களில் ஒன்றாகும்.

2015.01.18 ஆந் திகதிய 1897/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க 2015 ஆம் ஆண்டில் அமைச்சுப் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டதுடன் அது 2015.09.21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்டது. அதனால், 2015 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தின் அமுலாக்கற் செயன்முறையில் துறைவாரியான வகைப்படுத்தலுக்கு இணங்க தரவுகளையும் தகவல்களையும் பேணி வருவது நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கவில்லை. அட்டவணை 7.1 (இ) 2015 ஆம் ஆண்டில் கட்டுநிதியின் மொத்தப் பரம்பலின் சுருக்கத்தைக் காட்டுகின்றது.

### *அட்டவணை - 7.1 (இ) செலவீட்டு வகைகளின் கீழான கட்டுநிதியின் பரம்பல் (ரூபா மில்.)*

| | *2014* | *2015* |
|---|---|---|
| ஆள்சார் வேதனாதிகள் | *475,752* | *604,861* |
| ஓய்வூதியம் | *121,603* | *151,957* |
| சமுர்த்தி மற்றும் உர மானியங்கள் | *46,797* | *90,106* |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | *235,910* | *243,324* |
| வட்டிக் கொடுப்பனவுகள் | *449,826* | *530,869* |
| படுகடன் மீளச்செலுத்தல்கள் | *627,045* | *832,765* |
| மூலதனம் | *377,569* | *390,588* |

தனிப்பட்ட வேதனாதிகள், ஓய்வூதியங்கள் மற்றும் சமுர்த்தி மானியம் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக, மீளெழும் செலவுகக்கான மொத்தக் கட்டுநிதி விடுவிப்புக்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் *22%* ஆல் அதிகரித்திருந்தன. இது தவிர படுகடன் சேவைகளுக்காக *1,363,634* மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டிருந்தது. இது *2014* ஆம் ஆண்டில் படுகடன் சேவைகளுக்காகச் செய்யப்பட்ட செலவுடன் ஒப்பிடுகையில *26%* அதிகரிப்பாகும். மூலதனச் செலவினத்திற்கான கட்டுநிதி விடுவிப்புக்களுகம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் *3* சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## *7.2 பொதுப் படுகடன் முகாமை*

### *7.2.1 அரசாங்கத்தின் கடன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம் – 2015*

*2015 ஆம் ஆண்டுக்கான வள இடைவெளிக்கு நிதியீட்டம் செய்வதற்காக அதிகபட்சமாக மொத்தம் 1,780 பில்லியன் ரூபாவைக் கடனாகப் பெறுவதற்கு 2014 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது. 2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க திருத்தற் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட போதிலும் மொத்த கடன்பெறுகை வரையறையான 1,780 பில்லியன் ரூபாவில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை.*

*உண்மையான மொத்தக் கடன்பெறுகை 1,745 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது உள்நாட்டு மூலங்கள் மூலம் பெறப்பட்ட 1,188 பில்லியன் ரூபா வெளிநாட்டு மூலங்கள் பெறப்பட்ட 556 பில்லியன் ரூபா என்பவற்றை உள்ளடக்கியதாகும். வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட மொத்தக் கடன்களில் சர்வதேச சந்தைகளில் நாணய முறிகளின் விநியோகத்தின் மூலம் கிடைத்த வருமானமான 298 பில்லியன் ரூபாவும் நிகழ்ச்சித் திட்டக் கடன்களான 258 பில்லியன் ரூபாவும் அடங்கும். மொத்த கடன்பெறுகைகள் 2014 ஆம் ஆண்டின் 1,425 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் 23 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.*

*உண்மையான மொத்த உள்நாட்டுக் கடன்பெறுகைகள் 2014 ஆம் ஆண்டின் 1,002 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் 19 சதவீதத்தால் அதிகரித்து 1,188 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இந்த அதிகரிப்பு பிரதானமாக, 2015 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பவற்றினால் ஏற்பட்டதாகும்.*

***அட்டவணை 7.2.1 (அ)** அரசாங்க கடன்பெறுகை வரையறைகள் மற்றும் பயன்பாடு (ரூபா மில்லியன்)*

| விடயம் | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட வரையறை | பயன்பாடு | அனுமதிக்கப்பட்ட வரையறை | பயன்பாடு |
| **மொத்தக் கடன்பெறுகைகள்** | ***1,478,000*** | ***1,424,506*** | ***1,780,000*** | ***1,744,524*** |
| உள்நாட்டு | *1,146,500* | *1,001,968* | *1,222,000* | *1,188,154* |
| வெளிநாட்டு | *331,500* | *422,538* | *558,000* | *556,370* |
| **மொத்த நிதியீட்டம்** | ***1,478,000*** | ***1,424,506*** | ***1,780,000*** | ***1,744,524*** |


*மூலங்கள்: திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி*

## *7.2.2 உள்நாட்டு நிதியீட்டம்*

### *7.2.2.1 தேறிய உள்நாட்டு நிதியீட்டம் (NDF)*

*வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்கள் 57 சதவீதத்தால் அதிகரித்து 593 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையில் 72 சதவீதமாகும். 2015 ஆம் ஆண்டில் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்காக சந்தைப்படுத்தக்கூடிய படுகடன் சாதனங்கள் மூலம் பெறப்பட்ட மொத்தத் தேறிய கடன்பெறுகை 608 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை சந்தைப்படுத்த முடியாத படுகடன் மீளளிப்புக்கள் 15 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.*

*சந்தைப்படுத்தக்கூடிய படுகடன் சாதனங்களின் மொத்தப் பெறுமதியில் 2014 ஆம் ஆண்டில் 21 பில்லியன் ரூபாவாகக் காண்பபட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் பெறுமதி 2015 ஆம் ஆண்டில் 223 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது.*




*இவ்வருடத்தில், திறைசேரி உண்டியல்கள் மூலமான தேறிய வெளிப்பாய்ச்சல் 26.4 பில்லியன் ரூபா ஆகக் காண்பபட்டது. விநியோகத்துடன் ஒப்பிடுகையில் மீளச்செலுத்தல்களை விஞ்சியதாகக் காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் தேறிய பெறுகையான 26.1 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் தேறிய உள்நாட்டு நிதியீட்டம் 4.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் 46.5 பில்லியன் ரூபா பெறுமதியான சந்தைப்படுத்த முடியாத பெறுகைக் மீளச் செலுத்தப்பட்டது. இது பிரதானமாக, 31.4 பில்லியன் ரூபா பெறுமதியான ரூபாக் கடன்களின் மீளச்செலுத்தலை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது.*

***அட்டவணை 7.2.2 அரசாங்க வரவு செலவுத் திட்டத்திற்கான தேறிய உள்நாட்டு நிதியீட்டம் 2014 மற்றும் 2015***

| விடயம் | தொகை (ரூபா பில்லியன்) | | மொத்தத்தில் % ஆக | |
|---|---|---|---|---|
| | *2014* | *2015* | *2014* | *2015* |
| ***வகையின் அடிப்படையில்*** | ***378.7*** | ***592.7*** | ***100.0*** | ***100.0*** |
| சாதனங்கள் மூலமான கடன்பெறுகைகள் | *416.2* | *607.7* | *109.9* | *102.5* |
| திறைசேரி முறிகள்* | *369.1* | *442.6* | *97.5* | *74.7* |
| திறைசேரி உண்டியல்கள்* | *26.1* | *-26.4* | *6.9* | *-4.4* |
| ரூபாக் கடன்கள் | *0.0* | *-31.4* | *0.0* | *-5.3* |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | *21.0* | *223.0* | *5.5* | *37.6* |
| சாதனமல்லாக் கடன்பெறுகை | *-37.5* | *-15.0* | *-9.9* | *-2.5* |
| மத்திய வங்கியிடமிருந்த பெறப்பட்ட தற்காலிக முற்பணங்கள் | *34.7* | *7.2* | *9.2* | *1.2* |
| ஏனையவை | *-72.2* | *-22.3* | *-19.1* | *-3.8* |
| ***முதிர்ச்சியின் அடிப்படையில்*** | ***378.7*** | ***592.7*** | ***100.0*** | ***100.0*** |
| நடுத்தரக் காலம் முதல் நீண்ட காலம் வரை | *390.1* | *634.1* | *103.0* | *107.0* |
| திறைசேரி முறிகள்* | *369.1* | *442.6* | *97.5* | *74.7* |
| ரூபாக் கடன்கள் | *0.0* | *-31.4* | *0.0* | *-5.3* |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | *21.0* | *223.0* | *5.5* | *37.6* |
| குறுங்காலம் | *-11.4* | *-41.4* | *-3.0* | *-7.0* |
| திறைசேரி உண்டியல்கள்* | *26.1* | *-26.4* | *6.9* | *-4.4* |
| மத்திய வங்கியிடமிருந்த பெறப்பட்ட தற்காலிக முற்பணங்கள் | *34.7* | *7.2* | *9.2* | *1.2* |
| ஏனையவை | *-72.2* | *-22.3* | *-19.1* | *-3.8* |
| ***சந்தைப்படுத்தக்கூடிய தன்மையின் அடிப்படையில்*** | ***378.7*** | ***592.7*** | ***100.0*** | ***100.0*** |
| சந்தைப்படுத்தக்கூடியவை | *416.2* | *639.2* | *109.9* | *107.8* |
| திறைசேரி உண்டியல்கள்* | *26.1* | *-26.4* | *6.9* | *-4.4* |
| திறைசேரி முறிகள்* | *369.1* | *442.6* | *97.5* | *74.7* |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | *21.0* | *223.0* | *5.5* | *37.6* |
| சந்தைப்படுத்த முடியாதவை | *-37.5* | *-46.5* | *-9.9* | *-7.8* |
| ***உரிமையின் அடிப்படையில்*** | ***378.7*** | ***592.7*** | ***100.0*** | ***100.0*** |
| வங்கிகள் | *126.9* | *291.8* | *33.5* | *49.2* |
| மத்திய வங்கி | *35.7* | *80.3* | *9.4* | *13.5* |
| வர்த்தக வங்கிகள் | *91.3* | *211.6* | *24.1* | *35.7* |
| வங்கியல்லாத் துறை | *251.8* | *300.9* | *66.5* | *50.8* |

*மூலங்கள்: திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி*

** வதியாதோரின் முதலீடுகள் நீங்கலாக*


## *7.2.3 நிலுவையாகவுள்ள உள்நாட்டுப் படுகடன்*

*அரசாங்கத்தின் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த உள்நாட்டுப் படுகடனில், திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பன முறைய 67 சதவீதமாகவும் 13 சதவீதமாகவும் காணப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 16 சதவீதமாகக் காணப்பட்ட திறைசேரி உண்டியல்கள் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் 13 சதவீதமாகக் காணப்பட்டன. மீதமுள்ள பகுதி, இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட தற்காலிகமாக முற்பணங்கள் (3 சதவீதம்), ரூபாக் கடன்கள் (0.5 சதவீதம்) ஏனைய கடன்கள் (3 சதவீதம்) என்பவற்றின் மூலம் பெறப்பட்டிருந்தது.சந்தைப்படுத்தக்கூடிய சாதனங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபாக் கடன்கள் விநியோகிக்கப்படாமையினால் 2014 ஆம் ஆண்டில் 1.3 சதவீதமாகக் காணப்பட்ட ரூபாக் கடன்கள் 2015 ஆம் ஆண்டில் 0.5 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.*

*2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2015 ஆம் ஆண்டில் திறைசேரி முறிகளின் கையிருப்பு 16 சதவீதத்தால் அதிகரித்து 3,305 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை திறைசேரி உண்டியல்களின் கையிருப்பு 5.3 சதவீதத்தால் குறைவடைந்து 658 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இலங்கை அபிவிருத்தி முறிகளின் கையிருப்பு பெறுமதி 2015 ஆம் ஆண்டின் இறுதியில் 71 சதவீதத்தால் அதிகரித்து 668 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது*

### *7.2.3.1 உள்நாட்டுப் படுகடன்களின் மூதிர்வுக் கட்டமைப்பு*

*2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த உள்நாட்டுப் படுகடனில், நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடன்கள் 82 சதவீதமாகக் காணப்பட்ட அதேவேளை குறுகிய காலப் படுகடன் 18 சதவீதமாகக் காணப்பட்டது.*




*நடுத்தர முதல் நீண்ட காலம் வரையான மொத்தப் படுகடன்களில் திறைசேரி முறிகள் 3,305 பில்லியன் ரூபாவாக அல்லது 82 சதவீதமாகக் காணப்பட்ட அதேவேளை மீதமுள்ள 18 சதவீதத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகள் (16.5 சதவீதம்), ரூபாக் கடன்கள் (0.6 சதவீதம்) ஏனையவை (1.19 சதவீதம்) என்பன உள்ளடங்கியிருந்தன.*

### *7.2.3.2 உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்*

*அரசாங்கத்தின் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள், 2015 ஆம் ஆண்டில் பதிவாகிய 777 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் 68 சதவீதத்தால் அதிகரித்து 1,303 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மொத்தப் படுகடன் சேவைக் கொடுப்பனவில் கடனழிவு 794 பில்லியன் ரூபாவாக (60.9 சதவீதமாக) காணப்பட்ட அதேவேளை மீதி 510 பில்லியன் ரூபா (39.1 சதவீதம்) வட்டிக் கொடுப்பனவாகக் காணப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் படுகடன்களுக்கான கடனழிவுக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் முறையே 344 பில்லியன் ரூபாவாகவும் 182 பில்லியன் ரூபாவாகவும் அதிகரித்தது.*

*2014 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.9 ஆகக் காணப்பட்ட மொத்த உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 2015 ஆம் ஆண்டில் அதிகரித்து 11.7 சதவீதமாகக் காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.4 சதவீதமாகக் காணப்பட்ட உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 4.6 சதவீதமாக அதிகரித்துள்ள அதேவேளை முன்னைய வருடத்தில் 4.6 சதவீதமாகக் காணப்பட்ட உள்நாட்டு கடனழிவுக் கொடுப்பனவுகள் 7.1 சதவீதமாக அதிகரித்துள்ளன. முன்னைய வருடத்தில் 65.1 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த அரசாங்க வருமானத்திற்கான உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 89.6 சதவீதமாகக் அதிகரித்துள்ளன.*

**அட்டவணை *7.2.3* உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் (ரூபா மில்)**

| வருடம் | மூலதனக் கொடுப்பனவுகள் | வட்டிக் கொடுப்பனவுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 2005 | 203,347 | 113,164 | 316,511 |
| 2006 | 247,536 | 133,787 | 381,323 |
| 2007 | 252,165 | 161,370 | 413,535 |
| 2008 | 258,720 | 182,198 | 440,918 |
| 2009 | 401,296 | 273,977 | 675,273 |
| 2010 | 389,672 | 297,127 | 686,799 |
| 2011 | 439,894 | 288,134 | 728,028 |
| 2012 | 415,441 | 317,659 | 733,100 |
| 2013 | 496,042 | 354,706 | 850,748 |
| 2014 | 449,554 | 327,934 | 777,488 |
| 2015 | 793,547 | 509,674 | 1,303,221 |

*மூலங்கள்: திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம், அரசாங்க கணக்குகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி*

## 7.3 வெளிநாட்டு உதவி முகாமை

*மீள்பகிரத்தக்க வெளிநாட்டு உதவிகள் முறைமையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கு கட்டுநிதிகள் ஒன்றில் செயற்திட்டத்திற்கு நேரடியாக நிதிகளை விடுவிப்பதன் மூலம் அல்லது உரிய அமைச்சின் ஊடாக செயற்திட்டத்துக்கு விடுவிப்பதன் மூலம் வழங்கப்பட்டன. 2015 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் மீள்பகிரத்தக்க வெளிநாட்டு உதவி முறைமையின் கீழ் 1,927 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் 5,043 மில்லியன் ரூபா வெளிநாட்டு உதவி கொடைகள் காசாகக் கிடைக்கப்பெற்றன. இவை தவிர 970 மில்லியன் ரூபா பெறுமதியான மூலப்பொருட்களும் உபகரணங்களும் கிடைக்கப்பெற்றன.*

*உதவி வழங்கும் முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் நிதிகளை பல்வேறு செயற்திட்டங்களுக்கு வழங்கும் நோக்கத்திற்காக மத்திய வங்கி கட்டுநிதிக் கணக்குகளைப் பேணி வருகின்றது. 2015 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப் பகுதியில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் இத்தகைய 09 புதிய கணக்குகளை ஆரம்பித்தது. அதனால் 2015 டிசம்பர் மாத இறுதியில் தொழிற்பாட்டில் காணப்பட்ட மொத்தக் கணக்குகளின் எண்ணிக்கை 105 ஆகக் காணப்பட்டது. இவ்வருடத்தில் உதவி வழங்கும் முகவர்களிடமிருந்து இக்கணக்குகளுக்கு 38,148 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றது.*

## *7. 4. அரசாங்க வருமானம்*

## *7.4.1. வருமானம் சேகரித்தல்:*

*திறைசேரித் தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் 10 வருமானத் தலைப்புக்களுக்கான கணக்கீட்டு உத்தியோகத்தராகத் தொழிற்படுகின்றார். அவற்றில் இரண்டு தலைப்புக்கள் மூலதன மற்றும் துணைக் கடன்களுக்கான தவணைக் கொடுப்பனவுகள் தொடர்பானவையாகும். மீதி 8 வருமானத் தலைப்புக்களும் ஒரு தனியான திணைக்களத்துக்கு அல்லது அமைச்சுக்கு நேரடியாக ஒதுக்கப்பட முடியாத வருமானங்களைச் சேகரிப்பதற்கான தலைப்புக்களாகும். பின்வரும் 10 வரியல்லா வருமானத் தலைப்புக்களின்கீழ் 34.7 பில்லியன் ரூபாவை வரியல்லா வருமானமாக இத்திணைக்களம் சேகரித்தது. இது மீளாய்வாண்டுக்கான மொத்த வரியல்லா வருமான மதிப்பீடான 162.3 பில்லியன் ரூபாவின் 21.3 சதவீதமாகும்.*

***அட்டவணை 7.4 (அ): வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் திறைசேரித் தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்ட வரி மற்றும் வரியல்லா வருமானங்கள் - 2014-2015***

*(ரூபா. மில்)*

| வருமான விபரம் | *2014* | | *2015* | |
|---|---|---|---|---|
| | வருமான மதிப்பீடு | சேகரிக்கப்பட்ட வருமானம் | வருமான மதிப்பீடு | சேகரிக்கப்பட்ட வருமானம் |
| **வரியல்லா வருமானம்** | | | | |
| அரசா கட்டட வாடகை | *650.0* | *641.7* | - | - |
| ஏனைய வாடகைகள் | *3,120.0* | *3,509.9* | *200.0* | *95.0* |
| கடன் வழங்கல் வட்டி | *8,425.0* | *6,757.8* | *3,850.0* | *3,544.8* |
| ஏனைய வட்டி | *1,475.0* | *1,220.1* | *1,400.0* | *953.5* |
| திணைக்கள விற்பனைகள் | *100.0* | *98.7* | *110.0* | *143.1* |
| நானாவிதமானவை | *8,000.0* | *2,851.6* | *5,500.0* | *4,710.4* |
| தண்டங்கள் மற்றும் பறிமுதல்கள் ஏனையவை | *3,000.0* | *2,735.8* | *1,000.0* | *962.0* |
| ஏனைய பெறுகைகள் | *12,000.0* | *4,705.3* | *18,800.0* | *9,342.8* |
| ஏனைய நடைமுறை மாற்றல்கள் | *2,200.0* | *1,867.9* | *2,000.0* | *1,935.5* |
| மூலதனச் சொத்துக்களின் விற்பனை | *300.0* | *17,604.3* | *350.0* | *97.9* |
| துணைக் கடன் மீள் அறவீடு | *14,750.0* | *14,892.3* | *14,000.0* | *12,960.8* |
| **வரியல்லா வருமானம் உப மொத்தம்** | ***54,020.0*** | ***56,885.4*** | ***47,210.0*** | ***34,745.8*** |

| | | | | |
|---|---|---|---|---|
| **வரி வருமானம்** | | | | |
| தொலைபேசிப் பாவனையார் தீர்வை | *32,000.0* | *31,351.4* | - | - |
| **வரி வருமானம் உப மொத்தம்** | *32,000.0* | *31,351.4* | - | - |
| **திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம்** | ***86,020.0*** | ***88,236.8*** | **-** | **-** |

*திறைசேரித் தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகம், மேற்குறித்த வரி மற்றும் வரியல்லா வருமானச் சேகரிப்புக்கு மேலதிகமாக வெளிநாட்டு உதவிகளுக்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் தொழிற்படுகின்றார். இத்திணைக்களம் 2015 ஆம் ஆண்டில் 6 பில்லியன் ரூபாவை வெளிநாட்டு உதவியாகச் சேகரித்தது. இவ்வருடத்தில் இத்திணைக்களம் 11 வருமானத் தலைப்புக்களின் கீழ் 40.7 பில்லியன் ரூபாவை வருமானமாகச் சேகரித்துள்ளது.*

*வருமான மூலத்தின் ஏற்புடைமையைக் கவனத்திற் கொண்டு அவற்றை வினைத்திறன்மிக்க முறையிலும் பயனுறுதி வாய்ந்த முறையிலும் கண்காணிப்பதற்காக இந்த வருமானச் சேகரிப்புக்களின் முன்னேற்றத்தை நெருக்கமான முறையில் கண்காணிக்கும் நோக்கில் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் திறைசேரித் தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் உள்ள மூன்று வருமானத் தலைப்புக்கள் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களாக உள்ள 03 திணைக்களத் தலைவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.*

## *7.4.2 திறைசேரியின் துணைக் கடன்கள்*

*அரசாங்கம், நாட்டின் அபிவிருத்திச் செயன்முறைக்கு அத்தியவசியமான உட்கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்குச் செயலூக்கமிக்க பங்களிப்பை வழங்கும் பொதுத் தொழில்முயற்சிகளுக்கு துணைக் கடன்களை வழங்குகின்றது கடன் மீளளிப்புக்கள், வட்டி உள்ளிட்ட துணைக் கடன்களின் தவணைப் பணங்களை அறவிடுவது திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பிரதான பொறுப்புக்களில ஒன்றாகும். இத்திணைக்களம் இது தொடர்பான மாதாந்தம் இற்றைப்படுத்தப்படும் தரவுத் தளமொன்றைப் பேணி வருகின்றது.*

*இத்திணைக்களம் 13.57 பில்லியன் ரூபாவை புதிய துணைக் கடன்களாக விடுவித்ததுடன் பொதுத் தொழில்முயற்சிகளிடமிருந்து 12.96 பில்லியன் ரூபா துணைக் கடன் தவணைப் பணத்தை சேகரித்தது. அத்துடன் துணைக் கடன்களுக்கான வட்டியாக ரூபா 3.54 பில்லியன் அறவிடப்பட்டது.*

*பொதுத் தொழில்முயற்சிகள், வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள், பிராந்திய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட 56 அரசாங்க நிறுவனங்களுக்கு பிரதானமாக வழங்கப்பட்ட துணைக் கடன்களின் 2015.21.31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவையாகவுள்ள மொத்த*


*மீதி 174.19 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகம் என்பன போன்ற பாரிய கொடை வழங்குநர்களிடமிருந்த சலுகை அடிப்படையில் கிடைக்கப்பெறும் பிரதான கடன்களைப் பயன்படுத்தி இந்தத் துணைக் கடன்கள் வழங்கப்படுகின்றன.*

### *7.4.3. திறைசேரி உத்தரவாதங்கள்*

*பொதுத் தொழில்முயற்சிகள் 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமை (ப் பொறுப்புச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் நிதி நிறுவனங்களிடமிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு கடன் உத்தரவாதங்களைச் சமர்ப்பிக்குமாறு அத்தொழில்முயற்சிகளிடம் கோரப்படுகின்ற போது திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் அத்தொழில்முயற்சிகளுக்கு திறைசேரி உத்தரவாதங்களை வழங்குகின்றது.*

*2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் 593.01 பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உத்தரவாதங்களை வழங்கியிருந்தது. அவற்றில் 50.11 சதவீதமான உத்தரவாதங்கள் மின்சக்தி மற்றும் எரிசக்தித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது..*

***வரைபு 7.4 (ஆ) திறைசேரி உத்தரவாதங்களின் துறைவாரியான உள்ளடக்கம் 2015***



## *7.5 திறைசேரி தனிக் கணக்கு முறைமை மற்றும் திறைசேரி நிதி முகாமை முறைமை*

*அரசாங்க அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான நிதி முகாமைக்கு பொருத்தமான வங்கி முறைமையொன்று காணப்படுவது அவசியமாகும். நாட்டிலுள்ள வங்கி முறைமையை வலையமைப்பொன்றின் மூலம் இணைத்ததன் ஊடாக அரச நிதிகளைப் பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான முறையில் பயன்படுத்தும் நோக்கில், 2007 ஆம் ஆண்டில் திறைசேரி தனிக் கணக்கு முறைமையொன்றைத் திறைசேரி அறிமுகப்படுத்தியது.*


*2015.12.31 ஆந் திகதி வரையில் திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் கீழ் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பெயரில் 2391 உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் காணப்பட்டன. பின்வரும் அட்டவணை அக்கணக்குகளின் வங்கி அடிப்படையிலான பரம்பலைக் காட்டுகின்றது.*

| | *இலங்கை வங்கி* | *மக்கள் வங்கி* | *இலங்கை மத்திய வங்கி* | *மொத்தம்* |
|---|---|---|---|---|
| *திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் கீழுள்ள உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள்* | *1,561* | *802* | *0* | *2,363* |
| *திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பெயரில் பேணி வரப்படும் பிரதான உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள்* | *1* | *1* | *4* | *6* |
| *திறைசேரி தனிக் கணக்கு முறைமைக்கு வெளியே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பேணி வரப்படும் சேகரிப்புக் கணக்குகள்* | *16* | *6* | *0* | *22* |
| *மொத்தம்* | *1,578* | *809* | *4* | *2,391* |

*திறைசேரி தனிக் கணக்கு முறைமையை அறிமுகம் செய்ததன் ஊடாக வங்கிகளுடனான நிதிக் கொடுக்கல் வாங்கல்களை பயனுறுதி வாய்ந்த முறையில் சிக்கனமாக முகாமை செய்ததன் மூலம் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பிரதான கணக்குகள் மீதான வங்கி மேலதிகப்பற்றுக்களையும் அவற்றுக்கான செலவுகளையும் குறைக்க முடிந்தது. அதனால், திறைசேரி தனிக் கணக்கு முறைமை நாடு முழுவதிலும் உளள் அரசாங் வங்கிக் கணக்குகளில் காசு மீதிகள் பயன்படுத்தப்படாதிருப்பதைத் தவிர்க்க முடிந்துள்ளது.*

*2015 ஆம் ஆண்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் என்பற்றிலுள்ள அரசாங்கத்தின் கணக்குகளிலுள்ள நாளாந்தச் சராசரிக் காசு மீதி அண்ணளவாக 21 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் ஊடாகத் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பிரதான கணக்குகளுக்குத் இந்த கணக்கு மீதிகளைத் தற்காலிகமாகப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதனால் ரூபா 5.32 பில்லியன் ரூபா வட்டிச் செலவினம் சேமிக்கப்பட்டது. திறைசேரி தனிக் கணக்கு முறைமை இல்லாதவிடத்து மேலதிகப்பற்றுக்கான மொத்த வட்டிச் செலவு 32 சதவீதத்தால் அதிகரித்திருக்கும். இந்நிலைமையைப் பின்வரும் வரைபு விலக்குகின்றது.*

வரைபு



*நிதி முகாமைத் தகவல்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து முறைமையின் பயனர்-நட்புறவுத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் 2008 ஆம் ஆண்டில் திறைசேரி நிதி முகாமை முறைமை (TFMS) அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைமையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முகாமைத்துவ மீளாய்வுகளின் விளைவாக, இம்முறைமையின் தொழில்நுட்ப மற்றும் ஏனைய பராமரிப்புக்கும் மேம்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள வாடிக்கையாளர் நிறுவனத்தினால் 2015 ஆம் ஆண்டில் இம்முறைமை மேலும் மேம்படுத்தப்பட்டது.இந்த முறைமையினுள் முகாமைத்துவ அறிக்கைகளை தயார்படுத்தக்கூடியதாக உள்ளமை திணைக்களத்தினால் அன்றாடம் எடுக்கப்படும் முக்கியமான முகாமைத்துவத் தீர்மானங்களுக்குப் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. இம்முறைமையானது திரட்டு நிதியத்தின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் உள்ளிட்ட அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்வதற்கான வசதிகளைக் கொண்டுள்ளதுடன் நாள் முடிவுக் காசு நிலைமை அறிக்கையையும் முகாமைத்துவத்தின் மதிப்பீட்டு வழங்குகின்றது. இந்த முறைமையின் ஊடாகத் தயாரிக்கப்படும் தகவல்கள் பயனுறுதி வாய்ந்த தீர்மானம் எடுத்தலுக்கான ஒரு முகாமைத்துவக் கருவியாக உயர் முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்படுகின்றது.*

*2015 ஆம் ஆண்டில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மொத்தமாக ரூபா 4,330.3 பில்லியன் ரூபாவைப் பெறுகையாகப் பெற்றதுடன் மொத்தக் கொடுப்பனவு ரூபா 4,400.6 பில்லியனாகப் பதிவாகியது. இந்தப் பெறுகைகள் மற்றும் கொள்வனவுகள் அனைத்தும் முறையே 9,444 உட்செலுத்துகை வவுச்சர்களின் மூலமும் 18,252 கொள்வனவு வவுச்சர்களின் மூலமும் மேற்கொள்ளப்பட்டன. இந்த 18,252 கொடுப்பனவு வவுச்சர்களும் 17,933 கொடுக்கல் வாங்கல்களின் ஊடாக இலங்கையில் நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் வினைத்திறனையும் சௌகரிகத்தையும் பாதுகாபையும் உறுதிசெய்து மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் 16,062 வவுச்சர்கள் இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றின் ஊடாக இலத்திரனியல் நிதி மாற்ற முறைமையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. இது மொத்தக் கொடுக்கல் வாங்கல்களில் 88% ஆகும். இவை தவிர வங்கிகளுககு இடையிலான 319 வங்கிப் பரிமாற்றங்கள் அதே நேர மொத்த உள்ளீட்டுத் தீர்ப்பனவு (Real Time Gross entry Settlement -RTGS) முறையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் 2015 ஆம் ஆண்டில் பதிவாகிய 9,444 பெறுகைகளில் 76.7 சதவீதமானவை காசோலைகளைப் பயன்படுத்தாது இலத்திரனியல் நிதிப் பரிமாற்றத்தின் ஊடாகப் பெறப்பட்டன.*

## 7.6 ஆதனக் கடன் உத்தரவாத நிதியம்

ஒவ்வொரு அரசாங்க ஊழியருக்கும் வீடு போன்ற பெறுமதியான ஆதனமொன்றை வழங்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்துடன் வங்கித் தொகுதியிலுள்ள வசதிகளைப் பயன்படுத்தி புதிய கடன் திட்டமொன்று 2005 ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. கடன் பெறுபவர்கள் மரணித்தல் அல்லது நிரந்தரமாக அங்கவீனமடைதல் போன்றவற்றால் கடனை மீளச் செலுத்துவதில் வங்கிக்கு ஏற்படக்கூடிய இழப்புச் சாத்தியங்களைத் தணிப்பதற்காக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் கடன் உத்தரவாத நிதியமொன்று தாபிக்கப்பட்டது.

அந்த வகையில், இந்நிதியமானது 916 விதை மூலதனமாக 916 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி முறிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்த முதலீடு தற்பாது 1,134 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

அட்டவணை :
ஆதனக் கடன் உத்தரவாத நிதியத்தின் மூலம் செய்யப்பட்ட தீர்ப்பனவுகளின் முன்னேற்றம் 2005 - 2015

| வருடம் | 2005 – 2013 | 2014 | 2015 | மொத்தம் |
|---|---|---|---|---|
| மரணித்த/ நிரந்தரமாக அங்கவீனமுற்ற/மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 316 | 46 | 77 | 439 |
| மொத்தத் தீர்ப்பவனவு ரூபா. மில் | 235.3 | 32.4 | 65.3 | 333.0 |

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது போன்று, மரணித்த/ நிரந்தரமாக அங்கவீனமுற்ற/மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வுபெற்ற 439 அரசாங்க உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளான 333 மில்லியன் ரூபா உரிய அரசாங்க வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டதன் காரணமாக அவர்கள் பயனடைந்தனர். பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான நிதிய முகாமையின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதே திணைக்களத்தின் அவாவாகும்.